<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

O.S.NO. 42/2018

| | |
|---|---|
| Deposition of Witness | : PW-1 |
| Name | : பி.நடராஜன் |
| Father's Name /W/o | : த/பெ.பழனிசாமி |
| Religion | : இந்து |
| Caste | : - |
| Calling | : - |
| Address | : தக்கோலம், அரக்கோணம் வட்டம். |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 11.10.2022.

முதல் விசாரணை

நான் தற்போது எந்த ஊரில் உள்ளேன் என்றால் தக்கோலத்தில் உள்ளேன். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் இடத்தில் தகராறு செய்கிறார்கள் என்பதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேகநாதன் என்ன உறவு முறை என்றால் என் சொந்த தம்பி ஆவார். மேகநாதன் எப்போது இறந்தார் என்றால் சுமார் 10 வருடம் இருக்கும். கஸ்தூரி என்பவர் மேகநாதன் மனைவி மற்றும் பிரேம் குமார் மேகநாதன் மகன் என்றால் ஆம். நாங்கள் ஒரே குடும்பம் என்றால் ஆம். வழக்கு சொத்து வீடா நிலமா என்றால் நிலத்தின் மீது தான் போட்டுள்ளேன். நிலம் யாருடையது என்றால் என் தந்தை சம்பாதித்தது 8 ஏக்கர் 10 சென்ட், பூர்விக சொத்து 1 1/4 ஏக்கர் சொத்து ஆகும். என் தாயார் பெயரில் கிரையம் இருந்ததா என்றால் தனியாக 3 ஏக்கர் என் தாயார் பெயரில் இருந்தது. என் தந்தை 8 ஏக்கர் 10 சென்ட் யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் வெங்கடாசலபதி ராஜா என்பவரிடமிருந்து பரிவர்த்தனை பெற்றார். எவ்வளவு நிலம் கொடுத்தது எவ்வளவு பரிவர்த்தனை செய்தார் என்றால் எனக்கு தெரியவில்லை ஆவணம் உள்ளது. அதை பார்த்தால் தெரியும். பூர்விகமாக

பாத்தியப்பட்ட சொத்து 1 1/4 ஏக்கர் சொத்து எப்படி வந்தது என்றால் பாட்டன் மூலம் வந்தது. என் தாத்தா பெயர் திக்கா ரெட்டி. அவருக்கு நாளு மகன்கள். முதல் மகன் என் தந்தை பழனிசாமி, இரண்டாவது துரைசாமி, மூன்றாவது சின்னகண்ணு, நான்காவது கோவிந்தசாமி ரெட்டியார். பழனிசாமி மகன்கள் நானும் மேகநாதனும் மட்டும் தான். துரைசாமி, பழனிசாமியும் அக்கா, தங்கை திருணம் செய்து கொண்டார்கள் என்றால் ஆம். துரைசாமிக்கு எவ்வளவு இடம் கொடுத்தார்கள் என்றால் 8 ஏக்கர் 10 சென்ட்டில் 1 ஏக்கர் 80 சென்ட் நஞ்சை ஒரு ஆள் பாகம் என்று கொடுத்தார்கள். துரைசாமிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் குழந்தைகள் இல்லை. துரைசாமி ரெட்டியும் அவர் மனைவி அபுர்வம்மாள் 27.11.2000-ல் ஒரு உயில் எழுதினார்கள் என்றால் ஆம். மேகநாதனுக்கு 15 சென்ட் உயில் எழுதினார்கள் என்றால் ஆம். அந்த உயிலில் சர்வே எண்.1189/2-ல் பூரா ஏக்கர் 4.39-ல் பாட்டைக்கு தெற்கு பழனிசாமி ரெட்டி நிலத்திற்கு வடக்கும் கிழக்கும் சுந்தரம் நிலத்திற்கும் மேற்கும் இதன் மத்தியில் 15 சென்ட் என்று உயிலில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு உயில் எதுவும் எழுதிவைக்கவில்லை என்றால் ஆம்.